# THE TAMILIAN'S FRIEND

The Journal of the Tamilian Education Society.

# தமிழர் நேசன்

தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை.


"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு."—திருக்குறள்.



தொகுதி

VII


[வருஷம் 1-க்கு ரூ. 3]    காபிரைட்    [தனிப்பிரதி அணா 4.

# தமிழர் நேசன்

## ஏழாவது (1923—1924) தொகுதியின்

## பொருள் அடக்கம்


| விஷயம் | பக்கம் |
|---|---|
| 1. முன்னுரை :— ... ... ... | 1 |
| 2. விசேஷ நிருபங்கள் :— | |
| புறநானூற்று ஆராய்ச்சி—ஸ்ரீ. R ரங்காசாரியார், M.A., L.T., ஸ்ரீ. B A பாஷ்யம ஐயங்கார், B.A., L.T (பக்கங்கள் தனியாக இலக்கமிடப் பட்டிருக்கின்றன) | 9–72 |
| பத்துப் பாட்டு வசனம்—ஸ்ரீ. R ரங்காசாரியார், M.A., L.T. (பக்கங்கள் தனியாக இலக்கமிடப் பட்டிருக்கின்றன) ... | 1–40 |
| தமிழ்ப் புலவர் சரித்திரம்—தமிழபிமானி (பக்கங்கள் தனியாக இலக்கமிடப் பட்டிருக்கின்றன) ... ... | 1–8 |
| தபால் தலைகள்—ஸ்ரீ. V நாராயணையர் | 246 |
| 3. பௌதிக சாஸ்திரம் :— | |
| நீலநிறம்—ஸ்ரீ. P. N. அப்புஸ்வாமி, B.A., B.L. ... ... ... | 145 |
| 4. இரசாயன சாஸ்திரம் :— | |
| ஒரு அதிசயமான வஸ்து—ஸ்ரீ. K சுப்பிரமணிய ஐயர், B.E. ... ... | 17 |
| ஹீலியம்—ஸ்ரீ. K C வீரராகவ ஐயர், M.A., L.T., F.C.S. ... ... | 57 |
| திரியுள்ள எண்ணெய் விளக்குக்கள்—ஸ்ரீ. P. N அப்புஸ்வாமி, B.A., B.L. ... | 217 |

விஷயம் — பக்கம்

5. தாவர நூல் :—
புல்—ஸ்ரீ பிரொபஸர P. சுநதரம் பிள்ளை 11

6. உயிர நூல் :—
மண்ணுணி—ஸ்ரீ. பிரொபஸர் P சுந்தரம பிளளை ... ... ... 47
கம்பளிப் பூச்சி—ஸ்ரீ. P N அப்பு ஸ்வாமி, B.A , B.L. ... ... 241

7. வைத்திய சாஸ்திரமும் சுகாதாரமும் :—
தேயிலே, காபபி—ஸ்ரீ. D. ராமஸ்வாமி ஐயஙகார, B A , B.I ... ... 169
பால் ஆடை—ஸ்ரீ. P N அபபுஸ்வாமி, B A , B L ... ... ... 185

8. கூட்டுறவு இயக்கம் :—
மாணவா கூட்டுறவுச் சங்கம்—ஸ்ரீ. உவே. சா. வேங்கடராம ஐயர் ... ... 3
கூட்டுறவு இயக்கம் தோன்றிய முறைமை —ஸ்ரீ. உவே. சா. வேங்கடராம ஐயர் 106

9. சிற்பம் :—
பாலங்கள்— (படங்களுடன்) ஸ்ரீ. K சுபபிரமணிய ஐயர், B.E. 73, 97, 121, 149

10. ஜீவசரிதைகள் :—
ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதி—ஸ்ரீ. T. R. ராஜகோபால ஐயர் 13, 29, 53, 111, 128
ஸர் ஐஸாக் ந்யூட்டன்—ஸ்ரீ. B A பாஷ்யம ஐயங்கார, B A , I T. 202, 236, 253

11. தமிழ் மொழிகள் :— 182
ஷை மனுஷைவங்காதி பாதம்—ஸ்ரீ. தனெல சப்மன் 33, 65, 89, 113, 137, 161

விஷயம் பக்கம்

12. கல்வி :—

கைத் தொழில் பள்ளிக் கூடங்கள்—ஸ்ரீ. வே. நாராயண ஐயர், M.A., M.L. ... 41

இந்துக்களின் கல்வி அபிவிருத்தி—பரோடா மகாராஜா (ஸ்ரீ. அ. மாதவையர் மொழி பெயர்ப்பு) ... ... 188

13. கவிகள் :—

கற்றவா—ஸ்ரீ. ஊ. சா. வேங்கடராம ஐயர் ... ... ... 156

கோழை— ஷை ... 234

தாய் மொழி— ஷை ... 250

14. தமிழ்ச் செல்வம் : ஸ்ரீ. அ. மாதவையர் ...83, 131

15. கதைகள் :—

டான் க்விக்ஸாட்டின் விசித்ராநுபவங்கள் ஸ்ரீ. R ரங்காசாரியார், M.A., L.T., ஸ்ரீ. B A. பாஷ்யம் ஐயங்கார், B.A., L.T. 48,177

வேக் பீல்ட் கிராமத்து வேத போதகர்—தமிழ்ப்பிமானி (பக்கங்கள் தனியாக இலக்கமிடப் பட்டிருக்கின்றன) ... 1–48

16. நாடகங்கள் :—

மணிமேகலை துறவு—ஸ்ரீ. அ. மாதவையர் (பக்கங்கள் தனியாக இலக்கமிடப் பட்டிருக்கின்றன) ... 17–24

பாரிஸ்டர் பஞ்சநதம்—ஸ்ரீ. அ. மாதவையர் ... 205, 222

17. மதிப்புரை :— ... 109, 133, 235, 251

# தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு—திருக்குறள்.

தொகுதி VII. { ருதிரோத்காரி வருடம் சித்திரை மீ } பகுதி 1.

## முன்னுரை.

## Foreword

ஆறாவது தொகுதியில் ஸ்ரீமான் R. ஸ்வாமிநாத ஐயர் அவர்கள் "தமிழின் உற்பத்தி" என்னும் தலைப்பின் கீழ் தொடர்ச்சியாக எழுதிவந்த அரிய வியாசம் ஒன்றைப்பற்றிச் சிலது கூறுவது அவசியமெனத்தோன்றியதால் கூறலானோம். ஸ்ரீமான் R. ஸ்வாமிநாத ஐயர் அவர்கள் வெகு காலமாக இத் துறையில் ஆராய்ச்சி செய்து வந்திருக்கிறார்கள். அவர்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும், வடமொழியிலும் நல்ல திறமை யுடையவர்கள்; தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி, மராத்தி முதலிய பாஷைகளும் அவர்களுக்குத் தெரியும். அவர்களுக்கு ஒரு பாஷையிலாவது அதிகப் பற்று உண்டென்றாவது வெறுப்பு உண்டென்றாவது சொல்லுவது தவறாகும். இத்தகைய உதவிகளைக் கொண்டு அவர்களுக்குத் தோன்றிய அபிப்பிராயத்தை அவர்கள் வெளியிட்டு உண்மையை ஒருவாறு அறிய முயலும் முயற்சியே இவ்வியாசம். அதில்

கண்ட விஷயங்களுக்கு அவர்கள் சிற்சில ஆதாரங்களைக் காட்டியிருக்கிறார்கள் அவ்விஷயங்களுள் கொள்ளத் தகுவனவற்றைக் கொண்டு, கொள்ளத் தகாதனவற்றுக்கு ஆதாரங்கொண்டு மறுத்து உண்மையை வெளிப்படுதத முயலுவது அறிவுடையோர் கடமை அவ்வாறு அறிவாளர் தமது அபிப்பிராயத்தை எமக்கு அனுப்பிவைத்தால் எம்மால் கூடிய சிக்கிரம் அவற்றை நமது பத்திரிகை வாயிலாக வெளியிடத் தயாராயிருக்கிறோம்.

VI-ம் தொகுதி 11-ம் பகுதி முதல் வெளிவரும் ஸ்ரீமான் அ. மாதவய்யா, B.A., இயற்றிய 'மணிமேகலை துறவு" என்னும் நாடகத்தையும், VI-ம் தொகுதி 12-ம் பகுதி முதல் வெளிவரும் ஸ்ரீமான் R ரங்காசாரியார், M.A , L.T., எழுதிய 'புறநானூற்று ஆராய்ச்சி" யையும் நமது சந்தாதார் வேறாகக் கட்டி வைத்துக்கொள்ளப் பிரியப்படலாமென்றெண்ணி அவற்றின் பக்கங்களுக்குத் தனியாக இலக்கமிட்டு எவ்வெட்டுப் பக்கங்களாக வெளியிட்டு வருகிறோம் இந்தப் பகுதி முதல தமிழபிமானி என்ற புனைப்பெயர் பூண்ட ஒரு அறிவாளர் வெளியிடும் "வேக்பீல்டு கிராமதது வேதபோதகர்" என்னும் கதையையும் இவ்வாறே வெளிவர ஏற்பாடு செய்திருக்கிறோம்.

இந்தப் பகுதியோடு நமது பததிரிகையின் ஏழாவது வருஷம் தொடங்குகின்றது அதை இதுவரை அன்புடன் ஆதரித்து வந்த நண்பரும் அதற்கு இதுவரை வியாசங்கள் அனுப்பிவைத்த நண்பரும் இன்னும் மேன்மேலும் அது வளர்ந்தோங்கிப் பயன் அளிக்குமாறு உதவி புரிவாராக.

பத்திராதிபர், தமிழர் நேசன்.

# மாணவர் கூட்டுறவுச் சங்கம்.

# Students' Co-operative Society.

---

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூலில் தமிழ்ப்பண்டிதரான ஸ்ரீமான் உ. சா. வேங்கடராம ஐயர் எழுதியது *

இது, மாணவர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகம் முதலியவற்றைத் தாங்களே ஒன்றுசேர்ந்து பொதுவாக மொத்தத்தில் ரொக்கத்திற்கு வாங்கிச் சில்லறையாக ரொக்கங்கொடுத்துப் பிரிதெடுத்துக்கொள்ளும் சங்கமாகும்.

இந்தச் சங்கத்திற்கு மாணவர்களே தங்களுக்குள் சிலரை நிர்வாககர்களாகத் தெரிந்தெடுத்துக் கொள்ளுகிறார்கள். தங்களுக்கு வேண்டியவற்றைத் தங்களது சங்கத்தின் வழியாகவே வாங்கிவரவேண்டும் என்பதில் நம்பிக்கையும், உறுதியும் உள்ளவர்களாகவும் இருந்துவருகிறார்கள்.

தங்களுடைய அங்கத்தினர்களுக்கு வேண்டியவற்றை வெளியிலுள்ள சில்லறைக் கடைக்காரர்களைப் போலவே இந்தச் சங்கங்களும் பெரிய, மொத்த வியாபாரிகளிடம் வாங்கி வருகின்றன. அவர்களுள் சில பெருந்தன்மையுள்ளவர்கள் இச்சங்கங்களுக்கு நூற்றுக்குப் பத்துமுதல் இருபதுவரையில் விலையிற் குறைத்தும் கொடுத்துவருகிறார்கள். அதனால் இந்த மாணவர் சங்கங்கள், அந்த வெளியிலுள்ள சில்லறைக்

---

* இவ்வியாசம் புத்தகரூபமாக வெளிவந்திருக்கிறதெனினும், இது தரக்கூடிய பயனையும், இதன் ஆசிரியரது வேண்டுகோளையும் நினைந்து இங்கு மறுபடியும் இதைப் பிரசுரம் செய்யலானோம்.

ப-ர். த-நே.

கடைக்காரர்கள் பெறும் விலைக்கே தங்களுக்கு வேண்டியவற்றைப் பெறுகின்றன என்பதும் விளங்கும.

இப்படி வாங்கியவற்றை இவை, அந்தச் சில்லறைக் கடைக்காரர் விற்கும் விலைக்கே தங்களுடைய அங்கத்தினாகளுககும் கொடுத்துவருகின்றமையின், அக்கடைக்காரருக்குவரும் லாபம் இவற்றிற்கு மிகுதி ஆகின்றது. இந்த மிகுதியில் நிர்வாகச் செலவுக்குப் போனது போக பாக்கியில் பொதுநன்மை நிதி, க்ஷேம நிதி என்றவற்றிற்கு ஒரு பாகத்தை ஒதுக்கிவைத்துவிட்டு மிகுந்தபாகத்தை அங்கத்தினாகளுக்கு அவரவர்கள் வாங்கின ஏவுப்படி பிரித்துக் கொடுக்கின்றன.

ஏன் இத்தகைய சங்கங்கள் தோன்றவேண்டும் ?

உலக விடுதலைக்கும் பெரிதும் துணைசெய்வது கூட்டுறவு இயக்கமே என்பதில் பெரிதும் நம்பிக்கை வைத்த பெரியோர் நமது நாட்டிலும் பலா உளா. அன்னா, தங்களது நம்பிக்கையை வயது வந்த பொறுபபாளிகளான பொது ஜனங்களிடப் பாத்திவருகின்றனா. அம்முறையில, அப்பெரியோர்களது நன்முயற்சி விசேஷபயனை அளிக்கவில்லை. அதற்குக் காரணம் தற்காலம் நமது நாடடுப் பொதுஜனங்கள், தங்களுக்கு வேண்டிய பொருள்களைக் கடனுக வாங்குவதால் வரும் தீமையை நன்கு உணராததே. அனறியும், அவாகளது நீண்ட நாளைப் பழக்கமாகிய சொம்பேறிததனமும் அவர்களை விட்டு நீங்கினபாடில்லை.

ஆகவே, அன்னுர், தங்களது நம்பிகையான நோக்கம் கைகூடுமாறு நமது நாட்டின் எதிர்காலக் குடிமக்களாகிய மாணவர்களை இந்த இயக்கத்திற் பழக்கிவருவதைப பெரிதும் விரும்புகின்றனர். அது பற்றித்தான் நமது நாட்டிலும்—சிற்சில பள்ளிக்கூடங்களிலும், உயாதர கலாசாலைகளிலும்—

மாணவர்களுக்குப் பயனும், பழக்கமும் உண்டாகுமாறு மாணவர் கூட்டுறவுச் சங்கங்களைத் தோன்றுவித்தும் வருகின்றனர். இத்தகைய சங்கங்கள் நமது நாட்டிலுள்ள எல்லாக் கலாசாலைகளிலும், பள்ளிக்கூடங்களிலும் ஒரு காலத்தில் தோனறியே தீரும். அத்தகைய நிலைமை உண்டாவது தான் ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு மிக மேலான துணை புரிவதும்.

## இத்தகைய சங்கங்களால் உண்டாகும் பயன்.

இச்சங்கங்களால் உண்டாகும் நன்மைகள் பல அவற்றிற் சில சொல்லாமலே எவாக்கும் இனிது விளங்கும் இதுவரையிற் சில்லறைககடைக்காரர்களிடம் புத்தகம் முதலியவற்றை வாங்கிவநத பிள்ளைகள் இச்சங்கத்திற் சேர்ந்து இதன் வழியாகவே வாங்கிவருவதால் அந்தச் சில்லறைக் கடைககாரர்கள் லாபம் என்று அடையும் தோகையைத் தங்களுடையதாக்கிக் கோளளுகிறார்கள். வருஷம் ஒன்றுககுச் சுமார் இருபது ரூபாய்க்குக குறையாமல் புத்தகம் முதலிய வாங்கக்கூடிய மூவாயிரம்பிள்ளைகள் படித்துவரும் கும்பகோணம போன்ற பட்டணங்களில் பத்து வருஷங்களில அந்தச் சில்லறைக் கடைக்காராகளுக்கு லாபமும், இந்தச் சங்கங்களுக்கு மிகுதியும்என்று கருதக்கூடிய அத்தொகை எவ்வளவு பெரியதாகும்! சற்றேறக்குறைய எழுபத்தையாயிரம் ரூபாய்களாகின்றனவே' வட்டி முதலிய ஏதும் இன்றியே இவ்வளவு பெருநதொகை சேருமானால அதன் பெருககத்தை என்னென்று கூறுவது! இத்தகைய பெருந தொகையினைக் கொணடு தொழில நடததுபவர் அல்லவா முதலாளிகளெனப் படுகின்றனா? இபபொழுது நமது மாணவாகள் முதலாளிகளாகவில்லையா? இந்தப் பெருநதொகை மாணவர்களிடத்தில அவாகள் அனைவருக்கும் பொதுவானதாக இருக

குமாயின், அதனால் பொதுவாக உபயோகப்படக்கூடிய கற்கும் இடம், பேசும் இடம், சாப்பாட்டிடம், விளையாட்டிடம் போன்ற பல நலகாரியங்களுக்கு எவ்வளவு உதவியாயிருக்கும்? இங்ஙனம் பெருந்தொகை சேர்வதற்கு, அவர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகம் முதலியவற்றைக் கண்டிவிலைக்குத் தங்களது சங்கத்திலேயே வாங்கிவருவதைத் தவிர வேறு எந்தச் சிறுதொகையையும் சொடுத்து உதவவேண்டியதில்லை என்பதும் கவனிக்கத்தக்கது இந்தச் சங்கங்களை நடத்துவதால் மாணவர்கள் வியாபாரத்துறையிலும் வர்த்தகமுறைமையிலும் நல்ல அனுபவத்தைப் பெற்றவர்களாகின்றார்கள் அந்தப் பழக்கத்தால் அவர்கள் கணக்குப்பதிவு, கொடுக்கல்வாங்கல் முதலிய அவசியமான கலவிகளைக் கற்பதிலும் பிரியமுடையவர்களாகின்றார்கள். அன்றியும் அவர்கள் படிக்கும் காலத்திலேயே தங்களது பிற்கால வாழ்க்கைக்குத் துணைசெய்யக் கூடிய தொழில் முறையையும் இலகுவிற் கற்றுக்கொண்டவர்களாகின்றார்கள் இவற்றால் படிப்பை விட்டதும் 'எங்ஙனம் பிழைப்போம் ?" என்று ஏங்கி நிற்காமலும், துரைத்தனம் முதலிய துறைகளில் உத்தியோகம் கிடைக்காவிட்டாலும் " ஒரு தொழிலைச் செய்து சுகஜீவனம் பண்ணலாம் " என்ற தைரியத்துடனும் உற்சாகத்துடனும் இருத்தற்கும் அவர்களுக்கு இடமுண்டாகிறது இச்சங்கங்கள் சற்று விரிந்ததும் அவைகள் தங்களது நிர்வகத்துக்கு வேண்டிய உத்யோகஸ்தர்களையும் வேலை செய்வதற்கு வேண்டிய சேவகர்களையும், புத்தகம் முதலியவற்றை அச்சியற்றவும் பைண்டு செய்யவும் கூடிய பல தொழிலாளர்களையும் சம்பளம் கொடுத்து வைத்துக்கொள்ளக்கூடிய நிலைமையை அடைகின்றன. அக்கால், அவற்றின் அங்கத்தினர்களில் தகுதியுள்ளவர்களுக்கே அவை கொடுத்துதவப்படும் அவ்வகையில் இச்சங்கங்களின் அங்கத்தினர்கள் தாமே முதலாளியாகவும் தாமே

தொழிளாளியாகவும் இருக்க இடம் உண்டாகின்றது இங்கு 'வேலை கிடைக்காமையால் பிழைக்க வழியற்றிருக்கின்றோம்" என்று சொல்பவர்களுக்கு இந்த இயக்கம் தக்கதொரு வழியையும் காட்டுகின்றது என்பது ஊன்றியறியத்தக்கது. இந்த இயக்கத்தின் முன்னேற்றத்தில் விருப்பங்கொண்டவர்கள் ஜனப்பொறுப்பாட்சியாகிய ஆட்சியே மேலானது என்ற நம்பிக்கையினையுடையவர்களாவார்கள். நமது நாட்டிலே அத்தகைய உயரிய ஆட்சியை விரும்புகின்றவர்களில்லையா? மேல் நாடுகளில் அமெரிக்கா, ஜர்மனி முதலிய நாடுகளில்லையா? இங்கிலாந்தும் அத்தகைய ஆட்சியினைக் கைக்கொண்டொழுகும் நாடுதானே? இவற்றால் "ஆளப்படுவோர் கருத்தின்படியே ஆள்வோர் ஆட்சி செலுத்தல் வேண்டும்" என்பது புலப்படவில்லையா? இதனால்தான் கூட்டுறவாளிகளும் ஜனப்பொறுப்பாட்சியில் நம்பிக்கை வைத்துள்ளார்கள்; தங்களது இயக்கத்தையும் அத்துறையிலேயே நடத்தி வருகிறார்கள். இதில் ஏதும் தவறில்லை என்பது முற்கூறியவற்றால் இனிது விளங்கும்.

நிற்க, "ஆளப்படுவோர் கருத்தின்படியே ஆட்சி நடைபெறவேண்டும்" என்று கருதப்படும் இக்காலத்தில், தின வாழ்க்கைக்கு உபயோகப்படும் உணவு, உடை முதலியவற்றிற்கான பொருள்களை விலைகொடுத்து வாங்குவோர் கருத்தின்படி விற்போர் நடந்துகொள்ளவேண்டாமா? அஃதாவது வாங்குவோர், விற்போர் மீது ஆட்சிசெலுத்த அதிகாரமுள்ளவராயிருத்தல் வேண்டாமா? தற்காலம் நமது நாட்டில் அங்ஙனம் நடைபெறுகின்றதா? இல்லையே: மாறுபாடாகவன்றோ நடைபெறுகின்றது? மேல் நாடுகளிலே கூட்டுறவுச்சங்கங்கள் பத்தாயிரக்கணக்கிலே தோன்றி வியாபாரசுயஆட்சி பெரிதும் பரவி வருகின்றது என்பதும்; அதனால், அந்நாடுகளிலே

தரித்திரம், வேலையில்லாத்தொல்லை, பொருள் காரணமாக வரும் உயாவு தாழ்வு முதலியதிமைகள் நீங்கிவருகின்றன என்பதும் கேட்கப் படுகின்றனவே? ஏன் நமது நாட்டில் அத் தகைய உயரிய நிலைமை தோன்றலாகாது? நம்பிக்கையுடன் உறுதியாக ஊக்கங் கொண்டு முயன்றால் தோன்றிவே செய் யும் அதற்கு இத்தகைய மாணவர்கூட்டுறவுச்சங்கங்களே முதலில் அடிபபடையாக நின்று துணை செய்யககூடியன. நமது நாட்டிலும் துரைத்தனத்தாராலும், பொதுஜனங்களா லும் பல கூட்டுறவுச்சங்கங்கள் தோன்றியுள்ளன, ஆனால் அவை கூட்டுறவு முறையின் நோக்கதலையும், தத்துவத் தையும், அதைக கைககொள்ள வேண்டிய வழியையும் அறி யாதவாகளது நிர்வாகத்தால தற்காலம் உயிரற்ற நிலைமை யில் இருக்கின்றன. கிராமங்களிலே பலா எழுதப்படிக்கத் தெரியாதவர்களாகவும், பகுத்தறிவு இல்லாதவாகளாகவும் இருக்கின்றனா. ஆதலின், இம்முறையை இனிது பரப்பு வதற்குப் பெரிதும்துணை செய்யக்கூடியவாகள் இபபொ ழுது கல்வி கற்கும் மாணவாகளே. அவர்களுக்கு வேண்டிய புத்தகம் முதலிய கறறறகுரிய கருவிகள் ஒரே மாதிரியாக இருககின்றன. இஃது ஒருவகையில் மொத்தமாக வாங்கு வதற்குச்சாதகமாவதுடன் விசேஷ நன்மையினையும் தரக் கூடியது. இம்முறை மாணவர்களிடைப் பரவுவதும மிக எளிதானது. ஏனெனில், அவர்கள் அனைவரும் சற்றேறக் குறைய ஒரே வயதினா ஒரே வேலையிலிருப்பவா, ஒரே இட த்திற் பழகுபவா; ஒரே நோக்கத்துடன் முயலுபவர், அன்றி யும், இப் பருவம்தான் புதிய விஷயங்களைத தெரிநதுகொள் ளும் வன்மை வாய்ந்தது, உண்மை ஐக்கியவாதிகளாக இருக்க வேண்டிய பிரிக்க முடியாதநட்பை வளர்பபது, ஒற றுமை, உழைப்பு, ஒருவருக் கொருவர் உதவிசெய்து

கொள்ளுதல் முதலிய உயாநத குணங்களை வேரூன்றச் செய்வது. மேலும், தங்களுக்கு வேண்டியவற்றைத் தெரிந்தெடுத்துக் கொள்வதிலும், கைக்கொள்வதிலும் அவர்களுக்கு ஏதும் தொலலை யில்லை இதுவும் ஐக்கிய வியாபாரத்துறையில் பழகுவதற்கு அவர்களுக்கு எளிதாகின்றது. ஆதலின் மாணவாகளுக்கு கலவி, அறிவு, ஒழுக்கம் முதலியவற்றைப் பழக்கிக்கொள்ளுமஇடமே உலக விடுதலைக்காதாரமான சர்வ வல்லமையுள்ள கூட்டுறவு இயக்கததின் தத்துவங்களைக் கற்றுக்கொள்வதற்கும தங்களது பிற்கால வாழ்க்கைக்குத் தேவையான தொழில் முறைகளைக்கற்றுக் கொள்வதற்கும தகுநததோா இடமாகின்றது

கூட்டுறவாளி ஒருவகைப் பூர்த்தியான கருத்தினைக் கொண்டவா ; உயிரிய நோக்கத்தினையும் உடையவர். அன்றியும், பொதுஜனங்களுக்கு வேண்டிய பல நன்மைகளையும் பற்றி உண்மையாக ஆங்காங்குச்சென்று விரிததுரைதது அனைவரையும், இன்பமுறத தூண்டிவருபவா, அவாகளது குணத்தைப் பெருககி; மனதைப்பரிசுத்தப்படுத்துவதையே தமக்குரிய தொழிலாகக் கொணடிருப்பவா. இத்தகைய உயரிய குணம், செயல்களையுடையவா நமது மாணவாகளினின்றும் தோன்றவேண்டியது அவசியமல்லவா ! தோனறமுடியாததா? தோன்றமாட்டாாகளா? அவசியநதான்; தோன்றவும் தோன்றுவர்.

## மாணவர்கள் என்ன செய்யவேண்டும் ?

ஒவ்வொரு மாணவனும தான் படிக்கும் கலாசாலையிலே ஒரு மாணவா கூட்டுறவுச்சங்கம இருந்தால் உடனே அதிற் சேரவேண்டும் இலலாதிருந்தால் உடனே நட்பாளாகளுடன் சேர்ந்து ஒரு சங்கததை ஏற்படுத்தவேண்டும். சங்கத்தின் நன்மையையும்,வளர்ச்சியையும் கருதி ஒவ்வொரு கூட்டத்திற்

கும் தவறாது போதல்வேண்டும். சங்கத்தின் நாணயமாக நடந்து கொள்ளல் வேண்டும். ஆசையை உண்டு பண்ணக் கூடிய எவ்வளவு லாபத்தைக் காட்டிய போதிலும் வெளிக் கடைக்காரர்களிடம் தங்களுக்கு வேண்டியவற்றை வாங்கா மலும், தங்களுக்காக ஏற்பட்ட சங்கத்தார் தங்கள் அனைவரு டைய நன்மையின் பொருட்டு வாங்கி வைத்திருப்பவற்றையே வாங்கியும் வரல் வேண்டும். சங்கத்தின் பொது நன்மை நிதி யையும், க்ஷேமநிதியையும எவ்வளவு பெருக்கப்பார்க்க லாமோ அவ்வளவும் பெருக்கப் பார்த்தல்வேண்டும். தனித்த அங்கத்தினர் விஷயமாகவும், சங்கத்தின் விஷயமாகவும் ஆராய்ச்சி நேர்ந்தால், அக்கால், நடுநிலை பிறழாது சங்கத்தின் நன்மையை நாடுவதிலேயே கண்ணும் கருத்துமாயிருத்தல் வேண்டும். குறுகியநோக்கமின்றிப் பெருந்தன்மையாயிருக்க வேண்டும்.

ஆதலின், மாணவர்களே, உலகம் முழுவதும் தோன்றி வருகின்ற கூட்டுறவு இயக்கத்தைக் கூாந்து நோக்குங்கள். ஆங்காங்குத் தோன்றும் சங்கங்களையும், அவை செய்து வரும் நன்மைகளையும் பாருங்கள் அவற்றின் வரலாற்றை அறியுங்கள். உங்களது தாய்நாடு இருக்கும் சீர்கேட்டை யும், அது நன்னிலையைப் பெறுதற்கான வழியையும் சிந்தி யுங்கள் அஃது இக்கூட்டுறவு இயக்கமே என்பதை உணர் வீர்கள். அதனோடு அந்த இயக்கத்தைப் பரப்பி அழியாது நிலைபெறச் செய்யவல்லது உலகத்தை ஒன்றுபடுத்தக் கூடிய வன்மைவாய்ந்த இத்தகைய சிறு சங்கங்களாகிய மாணவர் கூட்டுறவுச் சங்கங்களே என்பதையும் உணர்வீர்கள். உணர்ந் தவாறே உறுதியுடன் ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என் பதைக் கடைப் பிடித்து உழைப்பீர்களானால் தவறாது நீங்க ளும், உங்கள் நாடும், உலகமும் உயர் நிலைபெறுவது ஒருதலை.

---

# புல்

# The Grass.

---

ஸ்ரீமான் P. சுந்தரம் பிள்ளை, M.A. இயற்றிய மனோன்மணீயம் என்னும் நாடகத்தினின்று எடுக்கப்பட்டது.

எவ்வினை யோர்க்கு மிம்மையிற் றம்மை
யியக்குதற் கின்பம் பயக்குமோ ரிலக்கு
வேண்டும் உயிரகத்து தூண்டுகோல் போலாம்
ஈண்டெப் பொருடா னிலக்கற் றிருப்பது?
இதோ ஓ! இக்கரை முளைத்த விச்சிறுபுல்
சதாதன் குறிப்பொடு சாருதல் காண்டி
அதன்சிறு பூக்குலை யடியொன் றுயாத்தி
யிதமுறத் தேன்றுளி தாங்கி யீக்களை
நலமுற வழைத்து நல்லூ ணருத்திப்
பலமுறை தனதுபூம் பராகம் பரப்பித்
தாசிலாச் சிறுகா யாக்கி, இதோ! என்
றாசிடைச சிக்குந் தோட்டியுங் கொடுத்தே,
"இவ்வயின் யாமெலாஞ் செவ்விதிற் றுன்னிற்
றழைபபதற் கிடமிலை, சிறாரீர் பிழைப்பதற்
கேகுமின் புள்ளா வெருதயத் தொருசார்
சிககிரீா சென்மின்!" எனத்தன் சிறுவரைப்
புக்கவிட் டிருக்குமிப் புல்லின் பரிவும்
பொறுமையும் புலனுங் காண்போர் ஒன்றையுஞ்
சிறுமையாச் சிந்தனை செயாதாங் காங்கு
தொற்றுபே ரழகு மாற்றல் சாலன்பும்

போற்றுதங் குறிப்பிற் கேற்றதோர் முயற்சியும்
பார்த்துப் பார்த்துத் தங்கண் பனிப்ப
ஆர்த்தெழு மன்பிற வினைத்தையுங் கலந்துதம்
மென்பெலாங் கரைக்குநல் லின்பந் திளைப்பர்.

இதன் பொருள்

அப் புல்லினுடைய சிறிய பூங்குலையானது தனது நாளத்தை உயரச்செய்து, அதன் மேலிருந்து இனிமை பொருந்தத தேன் துளிகளைத் தன்னிடததிற்கொண்டு, தேனீக்களை நன்றாகத் தன்னிடம் வரவழைத்துத் தேனாகிய நல்ல உணவை உண்பித்து, பயன் படும்படி தனது பூந்துகளைப் பரவச்செய்து, குற்றமிலலாத சிறிய காய்களை உண்டாக்கி; இவ்விடங்களிலெல்லாம் எனது ஆடையிலே சிக்குகிற தோட்டி யென்னும் கருவியையும் கொடுத்து, "இவ்விடத்து நாம் அனைவரும் நன்றாக அடர்ந்திருந்தால மேல்மேல் செழித்து வளர இடமில்லை, ஆதலால், சிறுவர்களே! நீங்கள் செழித்து வளாதற்கு பிற இடங்களுக்குச் செல்லுங்கள்; பறவைகள், பசுக்கள், எருதுகள், ஆடுகள் என்பவற்றில் ஏதேனும் ஒன்றிடத்து நீங்கள் சிக்கிக்கொண்டு போங்கள்" என்று சொல்லிச் சிறுகாய்களாகும் தன் மக்களை அவ்வவற்றில ஓட்டிச் செல்லவிட்டிருககிற இந்தப் புல்லினது அன்பையும் பொறுமையையும் அறிவையுமபாாப்பவர்கள் ஒரு பொருளையும் அற்பமானதாக எண்ணமல் அதனதனிடத்துக் காணப்படுகிற மிக்க அழகையும் உறுதி மிக்க அன்பையும விரும்புகிற தமது உத்தேசததுக்கு ஏற்றதொரு பிரயத்தனத்தையும் நன்றாக நோககி தங்கள் கண்கள் ஆனந்த நீர் துளிக்க பொங்கி எழுகின்ற அன்பால் எல்லா வுறுப்புக்களையும் தழுவித் தம் எலும்பு முழுவதையும் உருகச் செய்கிற சிறந்த இன்பத்தை அனுபவிப்பார்கள்.

# ஸ்வாமி தயானந்த சரஸ்வதி.
# Swami Dayanand Saraswati

ஸ்ரீமான் T. R. ராஜகோபால ஐயர் எழுதியது.

" புண்ணிய கன்மங்குறைந்து பாவகிருத்தியங்கள் எப்போது விருத்தியாகுமோ அப்போது அவதரிப்போம். சர்வான்மாககளும் நம்முடைய அம்சமானதினுலே அவர்கள் நன்மை தீமைகளை யறிந்து நற்கருமங்கள் புரிந்து ஈற்றில நமது திருவடிக்காளாகுமாறு நமமாலேற்படுததியுள்ள வேதாகமங்களில் விதித்த பிரகாரம் நடவாது அககிரமாதி யவைகளைப் புரியும் துட்டபாவிகளைச் சம்ஹரிக்கவும், நான் ஒருவனை உள்ளே னெனபதை யுள்ளபடி யறிநது உள்ளன்போடு பக்தி செய்து மனவாக்குக் காயங்களால் புண்ணிய கருமங்களைச் செய்துவருமசதவகுண வுத்தமாகளைக் காத்தற்பொருட்டும சமயம் நேரநதபோது அவதரிப்போம்". இவ்வுறுதிச் சொல் பன்முறை பல சமயங்களில் பலவிதத்தில் மெய்ப்பிக்கப் பட்டிருப்பதை, நமது சரித்திரத்தின் மீது நம்முடைய கண்களை ஓட்டுவோமாயின், நாம் அறியலாம். தர்மங்களை மறந்து, மனமாசை நீக்கி மேலுயர்த்தி ஆன்மாவைப் பிரகாசிப்பிக்கக் கூடாத மூடபக்திகளையும் வெளியாசாரங்களையும் கைக்கொண்டு, வெறுக்கததக்க கர்மங்கள் புரிந்து கெட்டுப்போன நம்தேசததினரைத் திருததி நற்பாதையில் விருத்தி முன் செலுத்துமாறு கிருஷ்ண பரமாத்மா முதல் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸர் ஈறாகப் பலா அவதரித்தது வெளிப்படையான விஷயம்.

"எல்லாம் ஈசன் செயல்," என்ற மூதுரையின் மெய்ப் பொருளை அறியாது, நம்முன்னோர்களின் நல்லுப தேசங்களைக கைவிட்டு, ஒழுங்கு தவறி, "ராவணன் ஆண்டா லென்ன, ராமன் ஆண்டாலென்ன; நாய் வாழ்ந்தென்ன, பூனை தாலியறுத்தென்ன?" என்ற விபரீதக் கோட்பாடுகளுக்குட் பட்டு, சுதேசாபிமானமும், ஒற்றுமையும், நேர்மையும் கிஞ் சிற்றேனுமில்லாது அடியோடு தொலைந்துபோயின. ஆதலால் நாமும் எளியராய் நமது வீரதீரத்தையும் இழந்தோம்.

இன்னோரன்ன சமயத்தில், பிறமதத்தினர் நமதுநாட் டிற் குடியேறித் தமது நூற்களையும் மதத்தையுமே புகழ்ந்து, எவ்விதத்திலும் இணையற்ற நம்முடைய உயர்ந்த மததத்துவங் களையும், கொள்கைகளின் பெருமையையும் சிறுமைப் படுத் தினார்கள். நம்முன்னோர்கள் எள்ளளவேனும சுயசிந்தனையும், ஆராய்ச்சியுமில்லாது அவர்களை நம்பி, அவர்கள் சொல் லைப் பற்றியதுடன் நில்லாது, நமது பிதாககளைத் தூற்றி, நம் முடைய மிக்க பழைய நாகரீகத்தையும இகழ்ந்தார்கள். இப்புதிய வெள்ளம் பிரவாகித்து நாலா பக்கங்களிலும் ஓடவே அக்காலத்திய இந்தியர்கள் மதியிழந்து. அதன் போக்குகளையே அநுசரித்து ஒழுகத் தொடங்கினார்கள். சிற றறிவும் சிறு தொழிலுமுடைய பன்மாக்களின் சிறிய கட்டுத் தகள், இழிய எண்ணங்கள், அசம்பாவித 'நீதிகள்' சிதறிக் கிடக்கப் பெற்ற நமது சில புராணங்களை பிறர சுட்டிக் காண் பித்துப் பரிகசிக்க, இந்தியரும் தம்முடைய வேதங்கள், உப நிஷத்துக்கள், பகவத்கீதை, இன்னுமிவைபோன்ற ஏனைய மிக்கமேலான நூற்களை முனகொணர்ந்து அவர்களின் வாயைக கட்டாதும், அவர்கள் சாதனையைப பொய்யென நிரூ பிக்காதும் இருந்து விட்டனர். அவர்கள் நம்முடைய புரா ணங்களைப் பழித்து நம்மை ஏளனஞ் செய்ததுபோல், நாமும்

அவர்களுடைய வேதபுத்தகங்களைப் பரீக்ஷித்து அவைக ளில் செறிந்து கிடக்கும் நீசகுணவொழுக் கங்களையும் கொள் கைகளையும் அவர்களுக்கு அறிவுறுத்தி வெல்லாது, அக்க சடர்களின் டம்பங்களைப் பார்த்துப் பிரமித்து வாளாவிருந்து விட்டோம்.

இத்தருணத்தில் நமது இந்தியாவைப் பூர்வநிலைக்கு உயர்த்தி, வேதங்களையும், சாஸ்திரங்களையும், காப்பியங்களை யும் பரப்பி, நாட்குநாள் வியாபித்துவந்த வெளியாசார வுப சாரங்களையும், விக்கிரஹாராதனையையும் போக்கி, கலாசாலை கள், தாமாலயங்கள் முதலானவைகளை எழுப்பி, ஆறு, குளம், கிணறுகளைத் தோண்டி உபகரிப்பதற்குப் பதிலாக, சிற்பிக ளும் புராதன விஷயங்களை ஆராய்ச்சி செய்பவர்களுமே சிலாகிக்கத் தக்க பிரம்மாண்ட கோயில்களைக் கட்டி, மறை படித்து இறுமாந்து, ஊரைத்துயருள் உருட்டி, கபடமும், ஆசையும், சுகபோக சிந்தனைகளும் திரண்டு உருவெடுத்தாற் போன்ற சிலபோலிப் பக்தர்களைக்கொண்டு அக்கோவில்களை நிர்வாஹித்துக் கடைசியில் நற்பலனும் ஆன்மவளர்ச்சியும் எவர்க்கும் இராமல் போனதை அறிந்து மனம்பொறுது' இவைகளைக் கண்டிக்க, ஓர் மகான் வழக்கம்போல அவதரித் தார். இவரே நமது தயானந்த சரஸ்வதி.

வேறும் பயபக்தி, வேரூன்றிய வைதீகம், அனுசாரம், தபோகுணம், கடும்பகை முதலானவை நிரம்பியவர்கள் இவர்க்கு விரோதிகளாகத் தோன்றியபோதிலும, வெல்லற் கரிய தர்க்கம், சரியான சமயத்தில் பிறர் குற்றங்களைத் தக்க படி கண்டித்தல், குறைகளை எடுத்துககாட்டல், தைரியம், ஊடுருவிப்பாயும் சுடுசொற்கள், தீர்ந்த கல்வி, பூரணஞானம், நல்லோர்களைத் தன்பக்கம் சேர்ததற்கான சக்தி, பரோபகார சிந்தனை முதலானவைகளால் அவ்வெதிரிகளின் மூடக்கொள்

கைகளையும், தாழ்ந்த குணத்தையும், வஞ்சக நடத்தையை யும் எதிர்த்து அடக்கிய பெருமகன் இவர். சுதேசத் தொழி ற்களை அபிவிர்த்தி செய்யவேண்டுமெனவும், சுதேச சரிதங் களையும், நூற்களையும் முதலில் கற்கவேண்டு மெனவும், மதத் தைப் பற்றிய கல்வி அத்தியாவசியமெனவும்; ஆண், பெண் இருவர்க்கும் கல்வி பிரதானமெனவும், இளங்கலியாணம தகாதெனவும், இக்காலத்திய ஜாதிப் பிரிவுகளும், மதக்கக்ஷிக ளும் அபாயமும் இழிவும் நிரம்பியவை யெனவும், நம்மு டைய வேதங்களிலில்லாத அரியபெரிய விஷயங்கள் வேறெச் சாஸ்திரங்களிலும் இல்லை யெனவும், இந்தியாகள் தம் ஆன்ம சக்தியைப் பலப்படுத்தி ஒன்ருகச் சேர்த்து, தம் மததத்வங்களை இவ்வுலகத்தவர்கரு வழங்கவேண்டு மெனவும் கொண்டவர் இவா.

(தொடரும்)

# THE VICAR OF WAKEFIELD

## வேக்பீ*ல்ட் கிராமத்து வேதபோதகர்.

### முதல் அதிகாரம்.

[உருவத்திலும் உள்ளத்திலும் ஒற்றுமை உள்ள வேகபீல்ட் குடும்பத்தின் விவரம்.]

'மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலன் நன்மக்கட் பேறு'

என்றபடி கலியாணஞ் செய்து கொண்டு நெறிதவறாத கிரகஸ்தனாய் வாழ்ந்து, பெண்டு பிள்ளைகளைக் காப்பாற்று பவன் ஒருவன்; அப்படியின்றி, ஜனப்பெருக்கைக் குறைக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு தன்னந் தனியனாய்ப் பிற விக்கிடம் பண்ணாமல் வாழ்பவன் மற்றொருவன். இவர்கள் இருவரில, முன்னவனே மூதுலகிற்கு நன்மை செய்பவன். இந்த எண்ணமே என்னெஞ்சத்தில் எப்போதும் குடி கொண்டிருந்தது இநநோககத்தோடு நான், †வேதபோதகன் ஆன ஒரு வருஷத்திற்குள், கலியாணத்தைப் பற்றி அதிக அக்கறையாய் ஆலோசிக்கத் தொடங்கினேன். பிறகு ஒரு பெண்ணை எனக்கு மனைவியாகத் தெரிந்தெடுத்தேன்.

---

*அந்நியபாஷைச் சொற்களை உச்சரிக்கச் சென்னை சர்வகலாசாலையார் அனுமதியுடன் தமிழில் ஏற்பட்ட புது எழுத்துகள் இரண்டு. (1) ப = f ; காபீ = Coffee , வேகபீலட் = Wakefield. (2) ஸ = z, கெஸட் = Gazette

"Wherever clearness requires accurate transliteration in respect of the alphabetic sounds represented by the English letters 'f' and 'z', the symbols ப and ஸ which are very slightly modified forms of the Tamil ப and the Grantha ஸ may be used for the purpose"—**Adopted by the Syndicate, University of Madras.**

† வேதபோதகர்-ஞானகுரு.

அவள் தனககுக் *கலியாண அங்கி ஒன்றைத் தெரிந்தெடுத்தபோது, அதன் வெளிப் பகட்டைப் பாராட்டவில்லை; நீடித்து நிற்கக்கூடிய அதன் உறுதி முதலிய தன்மைகளையே கவனித்தாள். நானும் அவ்வாறே அவளை மனைவியாகத் தெரிந்தெடுத்தபோது, அவள் வெளி அழகைப் பாராட்டவில்லை; நீடித்து நிற்கக்கூடிய அவளுடைய உத்தம குணங்களையே கவனித்தேன். பாரபட்சமில்லாமற் சொல்கிறேன்; அவள் நல்ல குணமுடையவள்; கண்ணுங் கருத்துமாய்க் குடும்பத்தைப் பாதுகாப்பவள். அவளைவிட உயர்நத பழகக வழக்கங்களுள்ள நாட்டுப் பெண்கள் கிடைப்பது அருமை. எந்த இங்கிலிஷ்ப் புஸ்தகம் எடுத்தாலும் அதிகமாய் எழுத்துக் கூட்டாமல் நன்ருய் வாசிப்பாள். ஊறுகாய் போடுவதிலும் வற்றல் இடுவதிலும், சமைப்பதிலும் அவளுக்கு மேம்பட்டவா ஒருவரும இல்லை. சீருஞ்செட்டுமாகக் குடித்தனம் செய்வதில் தனககுள்ள சாமாத்தியத்தைப் பற்றி அவள் அடிககடி பெருமை பாராட்டிக் கொள்வதுண்டு. ஆனல், அவள் குடித்தன சாமர்த்தியததினல நாங்கள் செலவத்திற் சிறநதது எந்நாளுமிலலை. [ஆயினும் நாங்கள் ஒருவர்மீது ஒருவர் பிரியமாய் அன்பு பாராட்டி வநதோம். எங்களுக்கு வயதேற ஏற எங்கள் வாஞ்சையும் மிகுநது கொண்டே வந்தது உலகில எதுவும் எங்களுக்கு வெறுபபு உண்டாக்கினதில்லை. எங்களுக்குள் கோபம் என்பதே தலை காட்டினது கிடையாது அழகிய ஊா ஒன்றில் எங்களுக்கு ஒரு சிறந்த வீடு அமைந்திருநதது. அக்கம் பக்கத்தாரும நலலவாகளாயிருநதாாகள் நாட்டுப்புறத்து விநோத வேடிக்கைகளிலும் அக்கம் பககததுப் பணக்காராகளைப் போயப பார்த்து வருவதிலும் ஏழைகளுககுக கஷ்டநிவர்த்தி செய்

* கலியாண அஙகி - ஆஙகிலபபெண்கள் கலியாண காலததில கழுதது முதல பாதம வரையில் தரிததுக்கொள்ளும் நெடுஞ்சட்டை-மேற்கவசம் (Wedding Gown)

† குடிததனபபாங்கு - குடிததனம செய்முறை.

‡ திருககுறள்

வதிலும் எங்கள் காலம் கடந்து வந்தது. எங்களுக்குக் கலக்கம் உண்டாகும் என்ற பயமில்லை. களைப்புவர வகையில்லை. நாங்கள் துணிந்து செய்த காரியம் எல்லாம் அடுப்பங்கரையைவிட்டு அப்பால் இல்லை. நாங்கள் செய்த பிரயாணமெல்லாம் வீட்டின ஒரு பாகத்திலிருந்து மறு பாகத்திற்கே தவிர வேறில்லை.

நாங்கள் சாலை ஓரத்தில வசித்தோம். ஆகையால் எங்கள் வீட்டுக் கனிரஸத்தைச் சுவைத்துப போவதற்குப் பாட்டைசாரிகளாவது *அதிதிகளாவது எங்களைக் காண வருவதுண்டு கனிரஸம் செய்வதில எங்களுக்குப் பிரக்யாதி அதிகம். ஒரு சரித்திர நூலாசிரியனுக்குரிய உண்மை சிறிதும் தவறாமல் கூறுகிறேன். எங்கள் வீட்டுககு வந்த விருநதாளிகள் எவரும் எங்கள் கனிரஸத்தைப் பற்றிக் குறை கூறியதாக நானறியேன. நாற்பதாங்கால் தாயாதி பங்காளிகளும் ‡ தலைமுறை உணாததும் உததியோக சாலையின் உதவி யில்லாமலே உறவுரிமையை நினைவில் வைத்திருநது எங்களை அடிககடிவநது கண்டார்கள். அவாகளிற் சிலர் சுற்றக்கிழமை பாராட்டி வநததனால் எங்களுக்கொன்றும் பெருமை வநது விடவில்லை. ஏனெனில் சுற்றமென வநதவர்களுள், குருடாகளும் உண்டு, நொண்டிகளும் உண்டு, சப்பாணிகளும உண்டு ஆயினும என் மனைவி என்னை நோக்கி, "காதல, இவாகள் இரத்தங் கலப்பானவாகள்; இவாகளை வேறு பிரிதது ஒதுககிவிடககூடாது இவாகளும் நமமுடன் ஒக்க இருந்து உண்ண வேண்டும்" என்று அடிக்கடி வற்புறுத்திப் பேசுவாள். அது எப்படியானாலும் எங்களிடத்தில் எபபோதும் மனங்கலநத உத்தம நண்பர்கள் கூடியிருந்தாாகள். அவாகள்

---

* அதிதிகள்- விருநதாளிகள்

† கூஸ்பெரியென்னும் ஒருவித இங்கிலீஷ்பழரஸம் (ஒயின்).

‡ தலைமுறை உணாததும் உததியோகசாலை - இஙகிலாநதில அந்தக காலத்தில் இபபடிபபட்ட உத்தியோகசாலை ஒனறு இருநதது, அதற்கு ஹெரால்ட்ஸ் ஆபீஸ் என்று பெயா.

மெத்தப் பணக்காரர்களாய் இல்லாவிட்டாலும் சுத்தக் குணக்காரர்களா யிருந்தார்கள். நமது வாழ்நாள் முழுவதும் இப்படி இருப்பதே உத்தமம். ஏனென்றால், விருந்தாளி எவ்வளவுக்கெவ்வளவு ஏழையோ அவ்வளவுக்கவ்வளவு கொஞ்சத்தில் மகிழ்ச்சி அடைகிறான்; அற்ப உபசாரத்தையும் ஆவலால் ஏற்றுக்கொள்ளுகிறான் சிலா, * பூவரசம்பூவின் மஞ்சள் நிறத்தையும், வண்ணாத்திப்பூச்சியின் விநோத வடிவத்தையும் கணகொட்டாமல் அதிசயமாய்க் காண்பதுபோல, இயற்கையாகவே நான், மார்தா நன்முகக் காட்சியை வியந்து கொண்டாடினேன்.

'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டு முகம்'

என்பது பழமொழி, ஆனாலும் எங்கள் சுற்றத்தாரில் எவனேனும் பொல்லாதவன், நல்வழியிற் செல்லாதவன், விருந்தாளிக்குகந்தகுணம இல்லாதவன், எங்களோடு கூடி யிருக்க † மனம் நில்லாதவன் என்று நான் தெரிந்துகொண்டால் அவன் என் வீட்டைவிட்டுப் போகையில அவனைப பற்றியும் நான் கவனித்தேன் மற்றவாகளுக்கு உதவும வழக்கம்போல, ‡ சாரிபோவதற் கனுகூலமாக அவனுக்கு [1]மேற்கவசம் அல்லது [2]காற்கவசம் கொடுத்தேன. சில சமயத்தில் சிறுவிலைக் குதிரையும் உதவினேன் அவைகளைத் திருப்பிக் கொடுக்கும் காரணத்தால் எங்கள் வீட்டுககு அவன் மறுபடியும் வராதிருப்பது எனக்கு மெத்தச் சந்தோஷம். இதனால், எங்களுககு விருப்பம் இல்லாதவாகள் எங்கள் வீட்டில் இருந்ததே கிடையாது. ஆனால் வேக்பீல்ட்

* பூவரசம்பூ - இஙகிலிஷில் டூலிப் (Tulip Flower) புஷ்பம் என்று வழஙகுகிறது இஙகுள்ள பூவரசம்பூவின விநோதம், அதைக கவனித்தாலகே விளங்கும்.

† மனம் நில்லாதவன் - எஙகள் மனம் தரிககாதவன்

‡ சாரிபோதல் - குதிரை ஏறிப போதல்

1 மேற்கவசம் - சாரி அங்கி (Riding Coat)

2 காற்கவசம் - காலில் மாட்டிககொள்ளும் ஜோடு - தோற் கவசம (Boots).

*குடும்பம் வழிப்போக்கர்களேயாவது, ஏழைகளேயாவது ஆதரிக்காமல் விட்டுவிட்டார்கள் என்கிற கெட்ட பேர் எப்போதும் எடுத்ததேயில்லை.

இப்படி நாங்கள் † பல்லாண்டு மெத்த ‡ சுகானுபவத்தோடு வாழ்ந்தோம். ஆனால் சிற்சில சமயங்களில் சிறு § மனத்தாங்கல்களும் நேரிட்டன—அவைகள் $ தெய்வாதீனமாய் நேரிட்டனவென்றே சொல்லவேண்டும் 'நல்லருணை வாழ்நாதா நம்மை வருத்துவது கொல்லவா பொல்லாத குணம்போக்க—கல்லில மழுக்குவதுங் கூறைதனை மாற்றவா வண்ணான் அழுக்குவாங் கைக்காம் அது' என்றபடி கடவுள் நம்மை வருத்துவது கொல்லவல்ல; பொல்லாதகுணம் போக்கவும் அவருடைய திருவருளைப்பற்றி நாம் இன்னும் அதிகமாக மதிக்கும் பொருட்டுமேயாம். ¶ கூறையை வண்ணான் கல்லில் அடிப்பது கிழிக்கவல்ல; அழுக்கெடுத்துச் சுத்தமாக்கும் பொருட்டென்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம்—என் பழத் தோட்டத்தைப் [1]பள்ளிப்பிள்ளைகள் அடிக்கடி கொள்ளையிட்டார்கள், என் மனைவி செய்துவைத்த பணியாரச்சிற்றுண்டிகளைப் பூனைகளும் குழந்தைகளும் திருடித்தின்றன. என் பிரசங்கத்தின் மெத்த உருக்கமான பாகத்தில் துரைமகன் ஒருவன் தூங்கி விழுவான். அல்லது கோயிலில் அவனுடைய மனைவி, என் மனைவி செய்த உபகாரத்துக்கு [2]மாறுபசாரம் அரையுங்குறையுமாகச் செய்வாள் இப்படிப்பட்ட அசந்தாபங்களால் நேரிட்ட மனத்தாங்கல்களை அப்போதைக்கப்போது நீக்கிக

---

* குடும்பம் - குடும்பத்தார்,

† பல்+ஆண்டு - பலவருஷம்

‡ சுகம்+அனுபவம் - சுகம் அனுபவித்தல்.

§ மனத்தாங்கல் - மனவருத்தம்.

$ தெய்வாதீனம் - தெய்வச்செயல்.

¶ கூறை - ஆடை.

1 பள்ளிப்பிள்ளைகள் - பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகள்.

2 மாறுஉபசாரம் - மறு+உபசாரம் - பிரதி உபகாரம்.

கொண்டு, சாதாரணமாய் இரண்டு மூன்று தினங்களுக்கொருமுறை அவைகளைப்பற்றி நாங்கள் அதிசயிக்கத் தொடங்கினோம்.

எதிலும் மிதமுள்ள குடும்பத்திற் பிறந்த எனது குழந்தைகள் படித்த படிப்பு நாகரிகமற்ற நாட்டுப்புறத்துப் படிப்பு. ஆகையால் அவர்கள் இளமையிலேயே நோயின்றிச் சரியான சரீர அமைப்போடு விளங்கினார்கள். ஆண்மக்கள் உடல் வன்மையாய் உற்சாகத்தோடிருந்தார்கள்; பெண்மக்கள் அழகாய் முகக் களையோடு தோன்றினார்கள். எனது தள்ளாத *வயதிற்கு ஆதரவான இந்தச் சிறு குடும்பவட்டத்துக் கிடையிலிருந்த நான், அடிக்கடி கௌண்ட் ஆபென்ஸ்பொக் என்னும் [illegible] சரிதையைக் கூறுவது வழக்கம். இது போபோன சரிதை ஆதலால், இதை நான் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. இந்த ஆபென்ஸ்பொக் [illegible] என்பவர், ஹென்றி இரண்டாவனுடைய செலவாக்கு ஜெர்மனியில் நடந்தகாலத்தில் இருந்தவர், மற்ற †இராஜ நண்பர்களெல்லாம் தத்தம் ஆஸ்திகளைக் கொண்டுவந்து அரசனைக் கண்டபோது, இவர் தமது முப்பத்திரண்டு மக்களைக் கொண்டுவந்து மன்னவனைக் கண்டு "அரசே இவர்களைத் தாங்கள் ‡காணிக்கையாக ஏற்றுக் கொள்ளவேண்டும். தங்களுக்கு நான் செலுத்தக்கூடிய *காணிக்கைகள் எல்லாவற்றிலும் இவர்களே விலை உயர்ந்தவர்கள்" என்று விண்ணப்பஞ்செய்தார். இப்படி எனக்கு ஆறுமக்கள் தாம் இருந்தார்கள் என்றாலும் அவர்களை நான் எனது தேசத்துக்கொரு பெரிய விலையில்லா வெகுமதியாக எண்ணினேன். ஆகையால் அவர்களை ஆஸ்தியாக மதித்தேன். எனது மூத்தமகன் பெயர் ஜியார்ஜ், எங்களுக்குப்

---

* வயதிற்கு - வயதில்

† இராஜ நண்பர்கள் - அரசன் தயையை எதிர்நோக்கி நிற்பவர்கள் (Courtiers)

‡ காணிக்கை அரசர் கடவுள் முதலிய உயர்ந்தோரைக் காணும்போது கொடுக்கும் பொருள்.

பதினாயிரம் பவுன் ஆஸ்தி வைத்துவிட்டு இறந்துபோன இவனுடைய * சிறறப்பன் ஞாபகார்த்தமாய் இவனுக்கு இப்பெயர் இட்டோம். எங்கள் இரண்டாவது குழந்தை, பெண்குழந்தை, அதற்கு இதனுடைய சிறியதாயின் ஞாபகார்த்தமாய், கிரிஸெல் என்று பெயரிட எண்ணினேன். ஆனால் இதைக் கருவுற்றிருந்தபோது என் மனைவி கதைப் புத்தகங்கள் படித்துக் கொண்டிருந்தாள். அவைகளிற் கண்டபடி இதற்கு அவள் ஒலிவியா என்று பெயரிட வற்புறுத்தினாள். அடுத்த வருஷத்துக்குள் எங்களுக்கு இன்னொரு பெண் பிறந்தது இப்போதாவது அதற்கு அந்தக் கிரிஸெல் என்று பெயரிடவேண்டும் என்று தீர்மானித்திருந்தேன்; ஆனால் இதற்குப் பணக்கார உறவின்முறையாள் ஒருத்தி † ஞானத்தாயாயிருக்க நாடினமையால், அவள் விரும்பியபடி ‡ சொபையா என்று பெயரிடப்பட்டது; இதனால் எங்கள் குடும்பத்தில், கதையிற் கண்ட பெயர்கள் இரண்டு ஏற்பட்டன; ஆனால் இதில் என் சம்பந்தமே கிடையாதென்று நிச்சயமாய்ச் சொல்லுவேன். இதற்கப்பால் எங்களுக்குப்பிறந்த ஆண் குழந்தை மோஸஸ் என்பவன்; இவன் பிறந்து பன்னிரண்டு வருஷம் ஆன பிறகு எங்களுக்கு இன்னும் இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தன.

'மக்கண்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு'

என்றபடி என்னைச் சூழ்ந்து என்மக்கள் இருக்கக் கண்ட நான் உள்ளம்பூரித்து, இறுமாந்திருந்தேன் என்பதை மறுக்கவில்லை, என் மனைவியின் இறுமாப்பும் உள்ளக் குளிர்ச்சியும் எனக்கிருந்ததைவிட இன்னும் அதிகமாயிருந்தன.

---

* மாமன் என்றலும் சரி.

† ஞானத்தாய் - கிறிஸ்தவர்கள் வழக்கம்போல் கோயிலிற் குழந்தை ஞானத்தில் முழுகும்போது அதற்கு முன்னிற்கும் மற்றொரு தாய்.

‡ சொபையா - Sophia.

'குழலினிது யாழினி தென்பதம் மக்கள
மழலைச் சொல் கேளா தவர்'

என்னும் பழமொழியை நாங்கள் அனுபவத்திற் கண்டோம். எங்கள் வீட்டுக்கு * வந்தவர்கள் யாராவது என் மனைவியை நோக்கி, "சரி, உண்மையாய்ச் சொல்லுகிறேன் அம்மா, பிரிம்ரோஸ் அம்மா! உங்கள் குழந்தைகளே குழந்தைகள்; அழகுள்ளவர்களென்றால், இவர்களுக்கே தகும்! இவர்களையும் பெற்றதனால் அதிர்ஷ்டமுள்ளவர்களென்றால உங்களுக்கே தகும்!" என்று சொன்னபோது, "ஆமாம். அம்மா, அண்டைவீட்டுக்காரம்மா! எல்லாம் ஈசன் செயல்—கடவுள் உண்டாக்கினபடி இவர்கள் இருக்கிறார்கள்—மேலழகாயிருந்து என்னபலன்? 'குலத்தாலென்' அழகாலென், குணங்களே பெருஞ்செல்வம்' என்றபடி, உள்ளழகிருந்தால மேலழகு அழகுதான்; படித்து நல்லவர்களாயிருந்தால, அதுவே அழகுக்கழகு, அதுதான் அழகால் அடையும் பெருமை" என்று என்மனைவி சொல்லுவாள். பிறகு அவள், பெண்களை நோக்கித் தலை நிமிர்ந்திருங்கள் என்பாள். அவர்கள் அப்படியே † உண்மையில் மெத்த அழகாயிருந்தார்கள்.

'அத்திமரத்தின அழகான செங்கனிதாம்
அத்தனையும உட்சொத்தை யாகுவபோல்—
மேலழகாய்த தோன்றுகின்ற மிண்டருக்கும் உள்ளழகாம
நூலழகுண்டாமோ நுவல்'

என்றபடி வெறு மேலழகைப்பற்றி எனக்கு மதிப்பே கிடையாது இந்தக் கதையில் அதைப்பற்றி நான அத்தனை ஞாபகமாய் எடுத்துரைக்கப்படாது ஊராரெல்லாம் ஒரேவிதமாய் அதைப பாராட்டிப் பேசினதே ‡ காரணம்—ஒலிவியாவுக்கு இப்போது பதினெட்டுவயது—நல்ல மடந்தைப் பருவம்—அழகுக்கு மெத்த உடந்தையாய்ச் சித்திர்க்காரர் விசித்திரமாய்த் தீட்டும் அரம்பையின் அழகு

* வந்தவர்கள் - அண்டை அயல் வீட்டார்.

† உண்மையில் - உண்மையாயச் சொல்லுமிடத்தில்.

‡ காரணம் - அப்படி எடுத்துரைத்தற்குக் காரணம்.

வோா நூலிலிருந்து கடல்கோளுக்கு முன்பு குமரியாறறின் தெற்கே பல நாடுகளிலிருந்தமை வலிபெறுகின்றது

இனி இக்கடல் கோளுக்குப் புறச்சான்றுகளும் உள இலங்கைத்தீவின் சரித்திரக் குறிப்புககளிலிருந்து 3 கடல் கோள்கள் அறியப்படுகின்றன. அவற்றுள் முதலாவது கி மு. 2387 இல் அதாவது பைபிலில் குறித்த நோவாப்பிரளயத்தை யொட்டி நிகழ்ந்த தெனவும், இரண்டாவது கி. மு. 450 இல் நிகழ்நத தெனவும், மூன்றுவது கி. மு. 213 முதல் 203 வரையுாண்ட தேவனும் பிரியதிஸ்ஸா என்ற அரசன் காலத்திலும் நிகழ்ந்த தெனவும் சொல்லப்படும். ஆதலின் சரித்திர காலத்தை யொட்டி உபப்பிரளயங்கள் நிகழ்ந்தன வென்பதற்கும் அவற்றின் பயனுகக் குமரியாற்றிற்குத் தேற்கே யிருந்த சில நாடுகள் கடலால் கவரப்பட்டன வென் புதற்கும் யாதொரு ஐயமுமில்லை. சரித்திர காலத்தில் கிரேக்க உரோம, அரேபிய ஆசிரியகளாற் குறித்த துறைமுகங்களே இப்போது மறைந்து போயினவன்றே? இந்தியாவின் கீழ் கடலோரங்கள் மேல்கடலோரங்களை விட அதிகமாகவே கடலின் சேட்டைகளுக்கு உட்பட்டுள்ளன. மகாபலிபுரத்தின் கதியே இதறகுத்தக்க இக்காலச் சான்றகும். 1857-ம் வருஷத்திற் பதிப்பித்த சென்னை எஞ்சினீா அறிக்கையில் "கடல எல்லை கடந்து நாட்டைக் கவாநதுக கொள்வது சரித்திர வாயிலாக அறிந்து கொள்ளும் காலத்திற்கு வெகு காலம் முன்னரே தொடங்கி அவ்வப்போது நிகழ்நது வருகிறது" என்று எழுதப்பட்டிருக்கிறது.

இனி கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்ததைப்பற்றிச் சிறிது புகலவோம இப்போது அச்சிட்டு வெளியேறிய கடைச்சங்க நூலகளிலிருநது நமகசு 530 புலவர்களது பெயர்கள் தெரிகின்றன. புறநானூறு பாடிய புலவர்களென்று நமக்கு இப்போது புலனுகும் 150 பெயாகளுள் அறுபது போகள் சமகாலத்திலிருந்தாரென்பது ஆராய்ச்சிகளால் வெளியாகிறது. இனனும் நுணுகி ஆராய்நதால் சமகாலத்த வராகவரும் புலவரின் தொகை அறுபதின் மேலதாகும் என்ப

தற்கு ஐய்மில்லே பாண்டியாகளால் மதுரையில்' சங்கம் நிறு வப்பட்டதும், புலவா பலா அவரால் போற்றபபட்டதும், அன்னோர் தமிழாராய்நததும், பாண்டியரைப் போலவே சேர சோழரும் பல சிற்றரசரும் வேளிரும் புலவாகளே ஆத ரிதது வநததும், முதலிய விஷயங்கள் புறநானூறு முதலிய சங்கநூல்களால பறையறையப படுகின்றன. கடைச் சங்க நாளிலேயே தமிழ்ப்பாஷை இத்தகைய சிறப்பும். பெருமை யும் வாய்ந்தும்; அரும்புலவர்கள் பலரால் பனுவல்கள் மிகுதி யாக இயறறப்பட்டும், இலக்கண வரம்பிற்கு உட்பட்டு இய லிசை நாடக நூல்கள் யாக்கப்பட்டும், நின்று நிலவியதை நினைக்கும்போது, கடைசசங்க காலத்துக்கு வெகுகாலத திற்கு முன்னமே தமிழ்ப்பாஷை போற்றி வளாக்கப்பட்டு வநதிருககவேண்டும் எனபது வெளியாகலாம. இதற்குச் சான்று தலை யிடைச் சங்க காலத்தைப் பற்றிய கன்ன பரம் பரை வரலாறே. ஆயினும் சரித்திரததிற கெட்டாத அக் காலத்தில சங்கமென்பதுணடா? சங்கம என்பது வட சொல்லாயிறறே? தனித் தமிழ் சொல்லால புலவா கூட்டம முன்னுளில் அழைக்கப்பட்டதற்கு யாதேனும் ஆதார முண்டோ? எனற வினுக்கள் எழலாம் மாங்குடி மருதனுா எனற கடைச்சங்கபுலவர் மதுரைக்காஞ்சியிலேயும பாணடி யரின் முன்னேற்றங்களேப் பற்றிப் புகலும்போது,

"பல்சாலை முதுகுடுமியின்
நலவேள் வித்துறை போகிய
தொல்லாணை நல்லாசிரியா
புணாகூட்டுண்ட புகழ்சாலசிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன்போல"

[மது. கா. 759-763]

என்ற அடிகளே வரைநதுளளாா இங்குக்குறித்த இரு பாணடியருள் முதுகுடுமி என்பான் குமரிக்கோடு கொடுங் கடல 'கொள்வதற்குமுன்பு இருநதவன் : பல யாகங்களைச் செய்து பெயா பெற்றவன் : பஃறுளி யாறுபாய்ந்த நாட்டிற் குரியவன் [புறம் 9] நிலநதருதிருவின் நெடியோன் என்பான்

மூன்றாஞ்சங்கம் நிறுவிய முத்திருமாறனாக இருக்கலாம் என்று கருத இடமுள்ளது. இவ்விருவரும் தொல்லாணை நல்லாசிரியர்களைக் கூட்டிககளித்து வந்ததாகச் சொல்லப்படுவதால் அவர்கள் பல தமிழ் புலவர்களையும் கூட்டித் தமிழாராய்ந்து வந்தனரென்று கூறுவதில் என்ன வியப்பு?

மேற கூறிய வறறிலிருந்தும் முன்னாளில் சங்கமொன்றிருந்ததென்பதும் சங்கப்புலவர்கள் பாண்டியர்களது ஆணை பெற்றுத் தமிழாராய்ந்து குற்றங்களைநத நற்றமிழ் நூல்களையே அரங்கேறச்செய்து வந்தனரென்பதும் வெள்ளிடைமலை

இனிச்சங்கம ஒன்று பலவா என்பது ஆராயத்தககது. முதற்சங்க வரலாற்றை முன்னா ஆராய்வோம். இதில குறிககப்பட்ட புலவர்களின் பெயர், தொகை, பாணடியர்களின் தொகை, காலம், சங்கம் நீடித்திருநதகாலம் முதலியவற்றிலிருநது இமமுதற்சங்கம் எவ்லாவழிகளிலும் வெகுசிறந்ததாகப் பண்டையோரால கருதப்பட்டது வெளியாகலாம். இச்சங்கத்தில அரங்கேறிய நூலகள் ஒன்றும நமக்குக் கிடைககவில்லை இச்சங்கப்புலவர்களுள் நமக்குத தெரிநதவரை ஒருவரே மனிதராக விருக்கிறார். அவரும் முடிநாகராயா என்ற பெயரைக்கொண்டுள்ளதால் இவா நாகசாதியாரென்று தெரிகிறது. மற்றப்புலவர்களுள் ஒருவர் இருடியாகிய அகஸ்தியர்; இருவர் தெய்வமாக இபபோது கொண்டாடப்படும் சிவனும் முருகனும் ஆவா; ஐந்தாவதாக கூறப்படுவர் நிதியின் கிழவன் இவரும் குபேரன் போன்ற ஒரு தேவனாக இருக்கலாகாதோ என்று நினைப்பதற்கிடமுள்ளது

இனி இரண்டாஞ்சங்க வரலாற்றை ஆராய்நதால, நமக்குச் சிறிது அதிகமான விஷயங்கள் தெரிகின்றன. இச்சங்கத்திலும அகஸ்தியர் இருநததாகக் கூறப்படுவதோடு அவரக்குப் பனனிரு மாணாக்கர்கள் இருநதனா என்பதும், அவருள் தொல்காப்பியா எழுதிய இலககணநூல அகததியத்தையும் அருகுமபடி செய்யவலல பெருமை வாய்ந்த தெனபதும

(4) பாண்டியரது அவைக் களத்திற்கு வரும் புலவர்கள் தங்களது நூலகளைச் சங்கப் புலவர்கள் முன்னிலையில் அரங் கேற்றி, அவர்களது சம்மதம் பெற்றே அரசனிடம் சம்மா வும் பெற்றனா

(5) உக்கிரப் பெருவழுதி காலத்தில் இசசங்கம் மிக வும் சிறப்புற்று விளங்கியது அநநாளில் புலவா பலர் உட னிருநது தமிழாராய்நதும், நூல்களியற்றியும் தனிச் செய் யுட்கள் பலவற்றைப் பாடித் தம்மை ஆதரிதத பிரபுக்களையும் சிற்றரசா பேரரசர்களையும சிறப்பித்தார்கள்.

(6) உககிரப் பெருவழுதி காலத்திறகுப் பிறகு சங்கம் கலைந்து போயிறறு. தமிழ் நாட்டிற்கே ஒரு பெருங்கேடு அக்காலம நிகழ்நதிருததல் வேண்டும

(7) உக்கிரப் பெருவழுதி காலததிலேயே சங்கச் செய்யுட்களைத தொகுததுப போற்றிவைககும வழககு ஏறபட்டு விட்டது. வாய் மொழியாக வநத பல செய்யுட்க ளும் அனல புனல் வாய்ப்பட்டு இறநதுபோகாமலும் மறதி யென்னும் பாவி வயிறறில ஒடுங்கி அழியாமலும் காப்பதற் கே இவ்வித உபாயம் கையாளப்பட்டது.

## சங்க காலம்

மேற்கூறியவைகளிலிருநது சங்ககாலததை ஒரு நிலை யாக அமைப்பது கூடாததாகும். அது வெகுகாலமாக நிகழ் நது வநதது எனபதற்கு ஐயமில்லை. அது எபபோது தோன்றியது? எப்போது மறைந்தது? எனபனவற்றை நிச் சயிபபதற்குத தக்க சான்றுகள் கிடையா. இறையனார் களவியலுரைகாரர் சங்கம் தோன்றியது முதலூழிக்கால மென்பா. அதாவது சங்க விஷய வரையறைப்படி இற் றைககுப பதினாயிரம் வருஷங்களுக்கு முன்பாகும் இக்கா லதது ஆராய்ச்சி வல்லார சிலர் கடைசசங்ககாலம கி.பி. 5-ம் நூற்றாண்டிற்குப் பிந்திய தென்பா. இதன் உணமையான காலம் இரண்டிறகும மததியமாக விருக்கவேண்டு மென்பதே தெளிவு.

சங்கம் தொடங்கிய காலம் மேற்கூறியபடி 3-ம் கடல் கோள்காலமாகிய கி. மு. 200 சமீபமென்று வைத்துக் கொண்டால தொல்காப்பியர் காலமும் அதுவே யாகும்

திருஞான சம்பந்தர காலம் கி. பி 7-ம் நூற்றாண்டென்பது யாவராலும் ஒப்பமுடிந்தது. அவரது தேவாரத்திற்கும் சங்க நூலகளுககும் சொற்புணர்ப்பிலேனும், நடையிலேனும, யாப்பிலேனும், விஷயங்களிலேனும். கருத்துக்களிலேனும் யாதோர் ஒற்றுமையும் கிடையாது. அதனால சம்பந்தருககுச் சில நூற்றாண்டுகளுககு முன்னரே கடைச்சங்கம் இறந்துபோயிருத்தல் வேண்டும் என்பது திண்ணம

இனி கி பி. 470-ல மதுரையிலே ஒரு பெரிய திராவிட சங்கம் பூஜ்யபாதரது சீடராகிய வச்சிரநந்தி என்பவரால் ஏற்படுத்தப்பட்டதென்று திகமபர தரிசனம என்ற சைனநூல் கூறுகின்றது. இச் சைன சங்கம் பண்டைய தமிழ்ச்சங்கத்தைப் பார்தது ஸ்தாபிககப்பட்டதென்பது வெளிப்படை அவ்வாறாயின் கடைச்சங்கம் இதற்குச் சற்று முன்பு இறநதொழிநததெனக கொள்ளலாம. அதாவது கி.பி. 400-க்கு முன்பு இருந்திருக்கவேண்டும்.

வேள்விக்குடி, சின்னமனூர செப்பேட்டுப் பட்டயங்களிலிருந்து பாண்டிய வமசாவளியின் ஒரு பாகம வெளியாகிறது. அவ்வம்சாவளி சென்னைச் சிலாசாஸன பரிசோதகாகளால 1908-ம் வருஷத்திய அறிக்கையில வெளியிடப் பட்டுள்ளது. அதன்படி மதுரையைக கைப்பற்றிய களப்பிரரது ஆட்சிக்குப் பிறகு கடுங்கோன் முதல ராஜஸிம்மன் III உள்பட 13 அரசர்கள் காணபபடுகின்றனா. அவ் வம்சாவளிப்படி ராஜஸிம்மன் III கி. பி. 900 ஆண்டையொட்டி யிருநதிருககவேணடும. அவ்வாறாயின் கடுங்கோன் என்பான் 13 தலைமுறைககு முநதியவனாதலின தலைமுறைக்கு 25 வருடங்களாகக கணககிட்டால அவவரசன் கி.பி. 535-ககு சமீபததில ஆண்டிருககலாம. இவவரசன் களப்பிரரது ஆட்சியினினறும பாண்டியநாட்டை மீட்டுககொணடவன். அககளபபிரரது ஆட்சி எவவளவு காலம்வரை நிகழ்நத

தென்பது நமமாலறியக் கூடவில்லை. வேள்விக்குடி சாசனமும் அதைபபற்றி மௌனம் சாதிககிறது ஆதலின் 7-வது அரச ஞகக்குறிக்கப்பபட்ட அச்சாசனத்தை அளித்த ஜடிலவாமன் பராந்தகன் காலத்திலேயே அககளப்பிரா து ஆட்சிகாலம் மற க்கபபடுமெ படியாக அவ்வளவு சேய்மைககண் அது ஏற்பட்ட தெனக்கொள்ளலாம். பாண்டிய சாசனத்தில் அக்களப்பிர ரைப்பற்றிய பேச்சுமட்டும்வேண்டுமேயன்றி, அவரது ஆட்சி காலத்தைப்பற்றிய பிரஸ்தாபம் வேண்டப்படுவதன்று என்று கூறினும் இழுக்காகாது. எவ்வாருயினும் அன்னோர் இடைக் கால ஆட்சி குறைநதபட்சம சில தலைமுறைகளே நடைபெற் றிருக்க வேண்டுமென்று கொள்ளினும் அவர்கள் 4-ம் நூற் ருண்டில இறுதியிலேனும் 5-ம் நூற்ருணடின் தொடக்கத்தி லேனும் பாண்டிநாட்டை வென்றிருககவேணடும்

இச்சாசனததிற் குறித்த பாண்டியவம்சாவளி மூலபுரு ஷன் கடுங்கோன் என்பான. இவன் பெயா முதற்சங்கத்து இறுதிக்கால அரசனது பெயரென்று களவியலுரை கூறும் இச்சாசனச் சாட்சியால் அவ்வரலாறு ஒரு ஆதாரம் பற்றி எழுநததென்பதும் எட்டாக்காலத்து விஷயங்கள் மாறுபட்டு வழங்குமென்பதும வெளியாகலாம் இது போலவேதான் களப்பிராது ஆட்சிககு முற்பட்டகாலமும் இச்சாசனத்தில் முதுகுடிமிப் பெருவழுதி ஒருவனே குறிக்கப்பட்டுள்ளான்; இதைக்கொண்டு வேறு அரசாகள் அக்காலமில்லையென்று தெளிவது பிழை. இம்முது குடுமியோ முதறசங்க காலத் திற்கு முந்தியவன் சங்கநூல்களில் வநதபாணடிய மன்னாகள் பெயாகள் பல களப்பிரரைப் பறறி அநநூல்களில் பிரஸ்தா பம் கிடையாது. ஆதலின் கடைசசங்கத இறுதிக் காலத்திற் குச் சிறிது பிறகே இககளபபிராபடை எழுச்சி நிகழ்நதிருத் தல வேண்டும். இதிலிருநது சங்கததிறுதிக்காலம் 4-ம் நூற ருணடின் தொடக்கத்திற்கு முனபிருப்பது அவசியம.

இனி இதை வேருெரு வழியாக ஆராய்வாம் கடைச் சங்கவரலாற்றுப்படி உக்கிரப்பெரு வழுதி[1] காலததில் கடைச் சங்கம் உன்னத ஸ்திதியிலிருந்தது அவனைப் பாடிய புல

வர் பலர். இவனே அகநானூற்றைத்தொகுப்பித்தவன் அதைத தொகுத்தோன் மதுரை உப்பூரி குடி கிழார் கனுனம உருத்திர சன்மன் என்பான் இவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழிய[2] னுக்குப் பின் ஆண்டவன். இவ் வரசனுககு முன் வந்தவன் வெற்றிவேற் செழியன்[3] அல்லது நன்மாறன். இவன் சித்திரமாடத்துத் துஞ்சியவன். சீத்தலைச் சாத்தனுரால் பாடப்பட்டவன். இப்புலவர் பாடிய ஆரியப் படைதந்த நெடுஞ் செழியன்.[4] வெற்றிவேற் செழியனுக்கு முன் ஆட்சிபுரிந்தவன இவனகாலத்திலே தான் கோவலன் கொலையுண்டான். மதுரை மாநகர் கண்ணகியின் மறக கற்பால எரியுண்டது இம்மன்னர் பிரான் சேரன் செங்குட்டுவன் காலத்தவன். சேரனுட்டில கண்ணகிககுக கோயில எடுப் பித்து விழாக கொண்டாடிய போது கங்கை யரசன் கயவாகு என்பான் வஞ்சியிலே விசயஞ் செய்திருந்தான். இவன். காலம் கி. பி 113-135 எனறு இலங்கைச் சரித்திரம் கூறும். டாக்டர் ப்ளீட் (Dr Fleet) என்பாமுதலிய ஆராய்ச்சி வல் லார் புத்தர் நிர்யாணததை 60 வருஷம் தள்ளிக் கணககிட்டு இவ்வரசனது காலத்தை கி. பி 173-193 எனபர். ஆதலின சேரன் செங்குட்டுவன் காலம் இரண்டாம நூற்றுண்டின் கடை என்று ஏறபடுகிறது இதிலிருந்து அவன் காலத்தி ருந்த பாண்டியன் நெடுஞ்செழியனுக்குப் பிறகு 4-ம் தலை முறையில் வந்த பாண்டியன் உககிரப் பெருவழுதி குறைந்த படியாக செங்குட்டுவனுககு 75 வருஷத்திற்குப்பின் பட்டத திற்கு வந்திருக்கலாம். அவ்வாருயின் அவன்காலம மூன்றும் நூற்றுண்டின இடைக்காலமாகும பனுடு தந்த பாணடியன் மாறனவழுதி என்பான் நற்றிணை நானூறு தொகுபபித்த வன் இவன் உககிரப் பெருவழுதிககுப் பின் ஆட்சி புரிந்த வன். இவன் நாளிலும சங்கம நடந்தது வெளிப்படை. இவன காலம 3 ம் நூற்றுண்டின் கடைப்பகுதி யென நிர்ணயிக்க லாம. ஆதலின புறநானூறு தொகுக்கப்பட்ட காலம் 3-ம நூறறுணடின் இடைக்காலமென்பதும் சங்கத்திறுதிக்காலம் 3-ம் நூற்றுண்டின கடைப்பகுதி யென்பதும தொள்ளுதற்கு ஓரிழுக்குமிலலை.